ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 5.9 – கையிலங்கு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.9 – கையிலங்கு

‡ கை இலங்காழி சங்கன் ⋆
கரு முகில் திரு நிறத்தன் ⋆
பொய் இலன் மெய்யன் ⋆
தன் தாள் அடைவரேல் அடிமை ஆக்கும் ⋆
செய் அலர் கமலம் ஓங்கு ⋆
செறி பொழில் தென் திருப்பேர் ⋆
பை அரவணையான் நாமம் ⋆
பரவி நான் உய்ந்த ஆறே ‖ **5.9.1** ‖

வங்கம் ஆர் கடல்கள் ஏழும் ⋆
மலையும் வானகமும் மற்றும் ⋆
அங்கண் மா ஞாலம் எல்லாம் ⋆
அமுது செய்துமிழ்ந்த எந்தை ⋆
திங்கள் மா முகில் அணவு ⋆
செறி பொழில் தென் திருப்பேர் ⋆
எங்கள் மால் இறைவன் நாமம் ⋆
ஏத்தி நான் உய்ந்த ஆறே ‖ **5.9.2** ‖

ஒருவனை உந்திப் பூமேல் ⋆
ஓங்குவித்தாகம் தன்னால் ⋆
ஒருவனைச் சாபம் நீக்கி ⋆
உம்பராள் என்று விட்டான் ⋆
பெரு வரை மதிள்கள் சூழ்ந்த ⋆

பெரு நகர் அரவணை மேல் ⋆
கரு வரை வண்ணன் தென் பேர் ⋆
கருதி நான் உய்ந்த ஆறே ॥ **5.9.3** ॥

ஊன் அமர் தலை ஒன்றேந்தி ⋆
உலகெலாம் திரியும் ஈசன் ⋆
ஈன் அமர் சாபம் நீக்காய் என்ன ⋆
ஒண் புனலை ஈந்தான் ⋆
தேன் அமர் பொழில்கள் சூழ்ந்த ⋆
செறி வயல் தென் திருப்பேர் ⋆
வானவர் தலைவன் நாமம் ⋆
வாழ்த்தி நான் உய்ந்த ஆறே ॥ **5.9.4** ॥

வக்கரன் வாய் முன் கீண்ட ⋆
மாயநே ! என்று வானோர் புக்கு ⋆
அரண் தந்தருளாய் என்ன ⋆
பொன் ஆகத்தானை ⋆
நக்கரி உருவம் ஆகி ⋆
நகம் கிளர்ந்திடந்துகந்த ⋆
சக்கரச் செல்வன் தென் பேர்த் ⋆
தலைவந் தாள் அடைந்துய்ந்தேனே ॥ **5.9.5** ॥

விலங்கலால் கடல் அடைத்து ⋆
விளங்கிழை பொருட்டு ⋆
வில்லால் இலங்கை மா நகர்க்கிறைவன் ⋆
இருபது புயம் துணித்தான் ⋆
நலம் கொள் நான்மறை வல்லார்கள் ⋆
ஓத்தொலி ஏத்தக் கேட்டு ⋆

மலங்கு பாய் வயல் திருப்பேர் ⋆
மருவி நான் வாழ்ந்த ஆறே ॥ **5.9.6** ॥

வெண்ணெய் தான் அமுது செய்ய ⋆
வெகுண்டு மத்தாய்ச்சி ஓச்சி ⋆
கண்ணி ஆர் குறுங்கயிற்றால் ⋆
கட்ட வெட்டென்றிருந்தான் ⋆
திண்ண மா மதிள்கள் சூழ்ந்த ⋆
தென் திருப்பேருள் ⋆
வேலை வண்ணனார் நாமம் ⋆
நாளும் வாய் மொழிந்துய்ந்த ஆறே ॥ **5.9.7** ॥

அம் பொன் ஆர் உலகம் ஏழும் அறிய ⋆
ஆய்ப்பாடி தன்னுள் ⋆
கொம்பனார் பின்னை கோலம் ⋆
கூடுதற்கேறு கொன்றான் ⋆
செம் பொன் ஆர் மதிள்கள் சூழ்ந்த ⋆
தென் திருப்பேருள் மேவும் ⋆
எம் பிரான் நாமம் ⋆
நாளும் ஏத்தி நான் உய்ந்த ஆறே ॥ **5.9.8** ॥

நால் வகை வேதம் ஐந்து வேள்வி ⋆
ஆறங்கம் வல்லார் ⋆
மேலை வானவரில் மிக்க ⋆
வேதியர் ஆதி காலம் ⋆
சேல் உகள் வயல் திருப்பேர்ச் ⋆
செங்கண் மாலோடும் வாழ்வார் ⋆

சீல மா தவத்தர் சிந்தை ஆளி ⋆
என் சிந்தையானே ‖ **5.9.9** ‖

‡ வண்டறை பொழில் திருப்பேர் ⋆
வரி அரவணையில் ⋆
பள்ளி கொண்டுறைகின்ற மாலைக் ⋆
கொடி மதிள் மாட மங்கை ⋆
திண் திறல் தோள் கலியன் ⋆
செஞ்சொலால் மொழிந்த மாலை ⋆
கொண்டிவை பாடி ஆடக் ⋆
கூடுவர் நீள் விசும்பே ‖ **5.9.10** ‖

அடிவரவு — கை வங்கம் ஒருவனை ஊன் வக்கரன் விலங்கலால்
வெண்ணெய் அம்பொன் நால்வகை வண்டறை தீதறு

கையிலங்கு முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்